F649



ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

अयेचेतश्शास्त्राण्यधिकमवगूढान्यपि मुधा-
नयद्यासञ्जेथाः पशुपतिपदांभोजभजने ।
तदित्थं भोक्तव्यं खलु पुनरपि प्रेत्य भुवने
महद्दुःखं वर्णग्रहणसमयोपक्रममिदम् ॥ मानसोल्लासम् ।

𑌅𑌯𑍇𑌚𑍇𑌤𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌧𑌿𑌕𑌮𑌵𑌗𑍂𑌢𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌮𑍁𑌧𑌾
𑌨𑌯𑍍𑌦𑍍𑌯𑌾𑌸𑌞𑍍𑌜𑍇𑌥𑌾𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌪𑌦𑌾𑌂𑌭𑍋𑌜𑌭𑌜𑌨𑍇 ।
𑌤𑌦𑌿𑌤𑍍𑌥𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌖𑌲𑍁 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌭𑍁𑌵𑌨𑍇
𑌮𑌹𑌦𑍍𑌦𑍁𑌃𑌖𑌂 𑌵𑌰𑍍𑌣𑌗𑍍𑌰𑌹𑌣𑌸𑌮𑌯𑍋𑌪𑌕𑍍𑌰𑌮𑌮𑌿𑌦𑌮𑍍 ।

அடே ஹ்ருதய! மிகவும் ஸூக்ஷ்மமான அர்த்தத்தை ரகஸ்யத்தில் வைத்துக்கொண்டிருக்கும் சாஸ்திரங்களின் வாயிலாகத் தத்வத்தைக் கண்டுபிடிப்பது சிரமம். பசுபதியான ஸ்ரீபார்வதீ பதியினுடைய சரணகமலங்களை ஸேவிக்காமல் சாஸ்திரார்த்த விசாரத்திலேயே நீ காலத்தைப் போக்கினால் மறுபடியும் பூமியில் அவதரித்து இப்பொழுது சிரமப்படுவது போல் எழுத்துக்களை அப்பியாஸம் செய்வது முதல் சிரமப்படவேண்டும். இது எவ்வளவு பெரிதான துக்கம்.

பகவத்பக்தியில்லாமல்சாஸ்திரார்த்தங்களை மாத்திரம்விசாரித்துஉண்மையையறிந்து நற்கதி பெறுவது சிரமம். சாஸ்திரவிசாரம் பண்ணாமல் திருடமான பரமேசுவர சரணபக்தியிருப்பின் ஈசுவரப்பிரஸாதத்தால் ஸம்ஸாரபந்தத்தை அறவேயொழித்து உத்தமமான சிரேயஸ்ஸைப் பெறலாம். கேவல சாஸ்திர விசாரத்தால் இவ்விதம் அடைய முடியாது. ஆகையால் பகவத்பக்தி அவசியம் வேண்டும் என்று அறிவிக்கிறார். இங்கு பக்தியை முக்கியமாகக் கூறவந்தபடியால் சாஸ்திரவிசாரத்தைக் கௌணமாகச் சொல்லியிருக்கிறார். இதினால் சாஸ்திர விசாரம் உபயோகமில்லை என்று கருத்தல்ல. அதுவும் அவசியம் வேண்டியதேயாகும். இக்கருத்தைக் கொண்டுதான்.

आसुप्तेरामृतेः कालं नयेद्वेदान्तचिन्तया ।

𑌆𑌸𑍁𑌪𑍍𑌤𑍇𑌰𑌾𑌮𑍃𑌤𑍇𑌃 𑌕𑌾𑌲𑌂 𑌨𑌯𑍇𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾 ।

எப்பொழுதும் வேதாந்த விசாரத்தால் காலத்தைக் கழிக்கவேண்டுமென்று சான்றோர் சாற்றியுள்ளார்.

சுபம்!

உபபத்திராதிபர்

# ஆர்ய தர்மம்.

பிரபவ-ஹூ அற்பசி-மீ ௧௧வ


## ஹரிஹராபேதம்.

(563-வது பக்கத்தொடர்ச்சி)

உம்முடைய தர்சனத்தினாலும் வதத்தினாலும் உங்களிருவர்களுக்கும் முக்தி ஏற்படுமென்று கூறினார். இந்த வசனத்தைக் கேட்ட அந்தணர் அடுத்த ஜன்மத்தில் இவர் எனக்கு எப்படி சத்ருவாக வரப்போகிறார். நான்எந்தமாதிரி ஜன்மாவைஅடையப்போகின்றேன் என்பதையும் அறிவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். பரமேசுவான் ஹே த்விஜ சிரேஷ்டா ! நீர் அடுத்த ஜன்மாவில் மதங்கர் எனப் பெயர்வாய்ந்த விப்ரரிஷியாக ஜனிக்கப்போகின்றீர். இந்த சூத்திரனும் இந்திர புத்திரனான வாலியாகப் பிறக்கப்போகிறான் எனறு தெரிவித்தார். பிராமணர் மறு பிறப்பிலும் இப்பிறவியிற் போல் பாவனமான ஸ்வரூபம்எனக்கு ஏற்படுமா என்கிற இந்த விஷயத்தையும் தாங்களெனக்கறிவிக்க வேண்டுமென்று அனேக வந்தனங்களுடன் வேண்டினார். மஹேசுவரர்.

रामो दाशरथिर्भूत्वा जटावल्कलवान् रणे ।
किष्किन्धायाबहिर्देशे वालिनं हेममालिनम् ॥
हनिष्यामि शरेणाशु विदूरे दृष्टिगोचरे ।
इत्युक्त्वा सहसा देवो देवैस्सह तिरोदधे ॥

𑌰𑌾𑌮𑍋𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌜𑌟𑌾𑌵𑌲𑍍𑌕𑌲𑌵𑌾𑌨𑍍 𑌰𑌣𑍇 ।
𑌕𑌿𑌷𑍍𑌕𑌿𑌨𑍍𑌧𑌾𑌯𑌾𑌬𑌹𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍇 𑌵𑌾𑌲𑌿𑌨𑌂 𑌹𑍇𑌮𑌮𑌾𑌲𑌿𑌨𑌮𑍍 ॥
𑌹𑌨𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌶𑌰𑍇𑌣𑌾𑌶𑍁 𑌵𑌿𑌦𑍂𑌰𑍇 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌗𑍋𑌚𑌰𑍇
𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌹𑌸𑌾 𑌦𑍇𑌵𑍋𑌦𑍇𑌵𑍈𑌸𑍍𑌸𑌹 𑌤𑌿𑌰𑍋𑌦𑌧𑍇 ॥

நான் ராமன் என்கிற பெயருடன் தசரதனுக்குப் புத்திரனாக அவதரித்து ஜடை மரவுரி இவைகளைத் தரித்தவனாயிருந்துகொண்டு ஸ்வர்ணமயமான மாலையையுடைய வாலியை கிஷ்கிந்தாநகரத்திற்கு வெளியில் நன்கு பார்க்கும்படியான ஸமீபப்பிரதேசத்தில் பாணத்தால் அடிக்கப்போகிறேன் என்று கூறி தேவதை

ளுடன் கூட சீக்கிரமாக மறைந்தார். பிறகு ஸுசீலன் என்கிற பிராமணனும் தர்மசீலன் என்கிற சூத்திரன் இவ்விருவரும் அற்ப காலம் பூமியிலிருந்து மரித்தவுடன் ஸ்வர்கலோகத்தையடைந்தார்கள். அங்கு சென்று அவ்விடத்தில் அனுபவிக்க வேண்டிய போகங்களையனுபவித்துப் பிறகு அவ்வேதியர் மதங்கரென்கிற மஹரிஷியாகப் புவியிற்தோன்றி எப்பொழுதும் தர்மசிந்தையுடையவராகத் தவத்திலிருந்தார். தர்மசீலன் என்கிற சூத்திரனும் வாலியாக ஜனித்து அதிகமான பலத்துடன் கூடியவனைக்கொண்டு தவம் செய்யும் மதங்க மஹரிஷிக்கு விரோதத்தைச் செய்கிறவனுய் கிஷ்கிந்தையையடைந்து அனேக வாநரங்களுக்கு அதிபனுக ஆனுன். இவ்விதம் இருக்கும் ஸமயத்தில் ஸ்ரீ சங்கரானவர் ஸகல பக்தர்களுக்கும் அனுக்கிரகம் செய்யவேண்டிய ஸ்ரீ ராமன் என்கிற பெயருடன் தசரதனுக்குப் புத்ரனுக அவதரித்து தம் பிதாவின் ஆக்ஞையைப் பரிபாலிக்க வேண்டி மிகவும் குரூரமான வனத்தையடைந்தார். ஸ்ரீ ராமன் என்று பிரஸித்திபெற்ற பகவானுன ஸ்ரீ சங்கரர் பம்பாஸரஸ்ஸையடைந்தார். அங்கு வந்ததும் சுக்ரீவனுடைய ஸ்நேகத்திற்காகவென்கிற வியாஜத்தைக்காட்டி வாலியை வதம் செய்து தம்ஸ்தானமான கைலாஸத்தைக்கொடுத்தார். மதங்கரென்கிற அந்தணருக்கும் தாம் தர்சனம் கொடுத்து அவரையும் கைலாஸத்திற்கு அனுப்பிவிட்டார். இவ்விருவர்களும் அங்கு பரமேசுவரனுல் ஆராதிக்கப்பட்டு பல சுகங்களையனுபவித்தார்கள். பிறகு விஷ்ணுலோகமான வைகுண்டத்தை அடைந்து சுகித்திருந்தார்கள்.

तस्माच्छिवार्चनं मुख्यं भुक्तिमुक्तिफलप्रदम् ।
हरिशङ्करयोर्भेदो नास्ति नास्ति जनाधिप ॥

தஸ்மாச்சிவார்ச்சநம் முக்யம் புக்திமுக்திபலப்ரதம் ।
ஹரிசங்கரயோர்பேதோ நாஸ்தி நாஸ்தி ஜநாதிப ।

ஆகையால் சிவார்ச்சனம் முக்கியமாகச் செய்ய வேணும். அதினுல் இவ்வுலகத்திலும் பரலோகத்திலுமுள்ள ஸகல போகங்களையும் அடையலாம். ஹே ஜநாதிப! ஜனங்களுக்கெல்லாம் நாயகரான ஹே தர்மபுத்திரரே! ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கும் ஸ்ரீ சங்கரருக்கும் பேதமே இல்லை. இல்லை என்று பீஷ்மர் சொல்லி முடித்தார்.

(தொடரும்)

உபபத்திராதிபர்.

5562

# இதுவும் காலவித்தியாசமா.

(592-வது பக்கத்தொடர்ச்சி)

ये कायस्थजनाश्च ये नृपसुता ये च द्विजाश्शास्त्रिणः
ते यत्नादनुसृत्य निर्दयतया शुष्कांस्तुरुष्काधिपान् ।
देवान् भूमिसुरांश्च पान्ति कृतिनस्तेचेद्गृहेष्वासने
ब्राह्मण्याय जलाञ्जलिः किल भुवि प्राज्ञैः प्रदेयोभवेत् ॥

யெ காயஸ்தஜநாஶ்ச யெ ந்ருபஸுதா யெ ச த்விஜாஶ்ஶாஸ்த்ரிண: தெ யத்நாதநுஸ்ருத்ய நிர்தயதயா ஶுஷ்காம்ஸ்துருஷ்காதிபாந் । தெவாந் பூமிஸுராம்ஶ்ச பாந்தி க்ருதிநஸ்தெசெத்க்ருஹெஷ்வாஸநெ ப்ராஹ்மண்யாய ஜலாஞ்ஜலி: கில புவி ப்ராஜ்ஞை: ப்ரதெயொபவெத் ।

தயவற்ற துலுக்கராஜாக்களிடத்தில் கணக்கன் வேலையையும் கத்திபிடித்து ஸேவகத்தையும் முன்னோர்கள்செய்து அவர்களைத் திருப்திசெய்து தேவர்களையும் பிராமணர்களையும் காப்பாற்றினர். அவர்கள் நம்போல் வீட்டில் உட்கார்ந்திருந்தனரேயாயின் பிராமண்யத்திற்குத் தர்ப்பணம் செய்ய நேர்ந்திருக்கும். அதாவது பிராமண்யமே இருந்திராது என்று வெங்கடாத்வரி சொல்லியதைக் கவனித்தால் அத்தகைய கஷ்டம் இப்போது நேர்ந்துவிடவில்லையென்றே சொல்லலாம். இருக்கட்டும், ஸந்தியாவந்தனம் சிராத்தம் உபநயனம் விவாகம் முதலியவற்றை முக்கிய அம்சத்தில் சேர்க்கிறதா? ஸாமான்யத்திலா? முக்கியத்திலானால் ஒவ்வொரு நாளும் இவைகளைச் செய்யும்படி ஜனங்களைத்தூண்டி வற்புறுத்த நமது கையில் மாஜிஸ்டிரேட்டின் அதிகாரம் வேண்டும். ஸாமான்யத்தில் சேர்ப்போமென்றாலும் தாங்கள் சேர்ப்பதற்கு முன்னமேயே அக்கன்மாக்களைப் பலர் கைவிட்டாய்விட்டதால் தங்களது ஆக்ஞை வீணாகுமென்று தோன்றுகிறது.

இனி அடுத்து நம் முன்னோர்கள் கடல் பழக்கம் அதிகமாய் வைத்துக்கொண்டிருந்ததாய்த் தெரிகிறது என்று அனுமானித்திருப்பது மிகவும் அழகாயிருக்கிறது. இவ்விதம் தாங்கள் அனுமானித்தது ஸ்ரீ ராமரது காலத்திற்குப் பின்னாலேற்பட்டதாய்த் தான் சொல்லவேண்டியிருக்கிறது. ராமர் காலத்திலும் அவ்விதமிருந்தால் வானரர்கள் ஸமுத்திரத்தைத்தாண்டவேண்டுமென்று கவலைப்பட்டிருக்கவே நேர்ந்திராது. ஸ்ரீ ராமரும் ஸமுத்ராத்தி

தில் அணைபோட ஸமுத்திரராஜனைப் பிரார்த்திக்கவும் வேண்டாம் வானரர்கள் அவ்வளவு சிரமப்பட்டிருக்கவும் வேண்டாம் இனிக் காளிதாஸனது காலத்திலும் பிரபலமாய் இல்லையென்று தோன்று கிறது இருந்தால்

पारसीकां स्ततोजेतुं प्रतस्थेस्थलवर्त्मना ।

வாரஸீகாம் ஸ்ததோஜேதும் ப்ரதஸ்தேஸ்தலவர்த்மநா ।

ஒருபாரஸீகதேசத்தை ஜயிக்கத் தரைமார்க்கமாய்ப்போனான் என்றெழுதியிருக்கிறான். பிறகுமல்லினாதர்காலத்திலும் இல்லையென்று தோன்றுகிறது. இருந்தால் ஜலமார்க்கமாய்ப் போவது சாஸ்திர நிஷேதம் என்று சொல்மாட்டார். ஆகவே ஆசார்யாள் அனுமானத்தில் நம் முன்னோர்களென்றது பிராமணரல்லாத முன்னோர்கள் என்று தான் கொள்ளவேண்டும். பிராமணர்களோ சாஸ்திர நிஷேதத்திற்கு மிகவும் பயந்திருந்தார்களென்றுதான் ஏற்படுகிறது. மற்றும் ஆசார்யாள் இன்னொரு அனுமானம் செய்திருக்கிறார்கள். மாலுமிக்குக் காப்டன் என்ற பெயருக்கொப்ப நம் ஆசார்யர்களுக்கும் கர்ணதாரர் என்று பெயரிருக்கிறதினால் கப்பல் ஒட்டுவதில் கைதேர்ந்தவர்களாம். அனுமானம் இந்தமட்டோடு நின்றதற்கு ஸந்தோஷப்படவேண்டும். ஏனெனில் நம்மை ஸம்ஸாரக்கடலைத் தாண்டி வைப்பதற்கு ஆசார்யர்களாய் ஏற்படுகிறவர்கள் முதலில் கப்பலோட்டிக் கைதேர்ந்த பிறகுதான் வரவேண்டும். ஆதல்பற்றியே கர்ணதாரன் என்று பெயர்வந்ததென்று சொல்லாமலிருந்தாரே. ஆனால் அவரது அனுமானத்தில் அதுவும் தொனிக்கிறது. ஆயினும் எங்களது ஆசார்யர் ஒருவரும் அப்படிச் செய்யவேயில்லை என்று மட்டிலும் உறுதி கூறுவேன். ராமானுஜரும் கப்பல் யாத்திரையில் கப்பலோட்டினார்என்று சொன்னால் யாரும் சகிக்கமாட்டார். இங்கு உண்மை இது. कर्णधारस्तुनाविकः கர்ணதாரஸ்துநாவிகஃ என்று கப்லோட்டிக்குப் பெயர். அவர்கள் 4-வது வர்ணத்தைச் சார்ந்தவர்கள். குகன் என்பவன் அச்சாதியோன். ஆகவே அவர்கள் நமக்கு ஆசார்யர்களல்ல. ஸம்ஸாரத்தை ஸமுத்திரமாய்ச்சொன்னதற்கும் குருவைக் கப்பலோட்டி என்று சொன்னதற்கும் காரணம் ஆசாரியர் சொல்வதல்ல. மற்று ஸாமான்ய ஜனங்கள் ஸமுத்திரத்தைப் பார்த்ததும் நடுங்குவார்கள். தீரனுயினும் அதில்

இறங்கி வெகுதூரம் செல்லமுடியாது. செல்ல வேண்டுமாயின் கப்பலோட்டியின் தயவின்றி நடைபெறவேமாட்டாது. ஆகவே ஸமர்த்தனான கப்பலோட்டியுள்ள கப்பலைத்தேடுவது. இச்சம்ஸாரமும் கடல்தான். அப்பயங்கரமான கடலில் வீழ்ந்த நமக்கு குருவென்ற கர்ணதாரன் கருணையின்றி வேறொன்றும்பயன்படாதென்பதே. இது பற்றியே ஞானி ஒருவர்.

संसृतिपारावारे ह्यगाधविषयोदकेन संपूर्णे ।

ஸம்ஸ்ருதிபாராவாரே ஹ்யகாதவிஷயோதகேந ஸம்பூர்ணே ।

ஸம்ஸாரமென்னும் கடலில் விஷயசுகமென்னும் ஜலம் நிறைந்திருக்கிறதென்றார். இந்த ஜலத்தில் செல்ல ஆசாரியர் சொல்லும் காப்டனு வாவேண்டும். இனி இதனை விடுத்து அடுத்ததிலிறங்குவோம்

அடுத்தது ஸமத்வம். இங்கு கோபாலாசார் சொல்வது இது முக்கியமாய் இக்காலத்தில் ஸமத்வம் பாராட்ட வேண்டுமாம். அதிலும் கீதையில் கூறிய ஸமத்வமாம். கீதையில் சொல்லிய ஸமத்வதரிசனமே ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தில் முக்கியமான அம்சமாம். அதைக்கொண்டு ஒருவரிடமும் த்வேஷபுத்தி பாராட்டாமல் ஜாதிபேதமன்னியில் நமது பழைய அனுவசியமானகுருட்டுப் பழக்கங்களை விட்டு விடவேண்டுமாம். அப்படிச் செய்தால்தான் நம்மதம் நிலைபெற்று நிற்குமாம். அதன் மூலமாய் ஹிந்துக்களாகிய நாம் கடைத்தேறலாமென்று முன்னுரையை முடித்தார்.

ஸமத்வமென்றால் என்ன? கீதையில் ஸமத்வம் யோகம் என்கிறார். இதை இவர்வேறோ ஸமான்யமாய்க்கூறுகிறார். கீதையில்

विद्याविनयसंपन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च पण्डितास्समदर्शिनः ॥

வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி ।
ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டிதாஸ்ஸமதர்ஶிநः ॥

வித்யை வினயம் இவைகளுடன்கூடிய பிராமணனிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், சண்டாளனிடத்தும் பண்டிதர்கள் ஸமதர்சிகள் என்கிறார். கீதாசார்யர், இத்தகைய ஸமத்வம் பண்டிதர்களென்று அளவுகடந்த பிர்மஞான

முள்ளவர்களைக் கூறுகிறார். இச்சமதர்சித்வம் நம்மாசாரியருக்கு மிகவல்பமாய்ப்போய்விட்டது ஏனோ இத்தகைய ஸமதர்சித்வம் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தில் மட்டுமல்ல. அத்வைதமதத்திற்கும் இதுவே அடிப்படை. இதை இலகுவாய்ப்பேசியதோடுநில்லாமல் ஜாதிபேதமன்னியில் நமது பழையஅனுவசியமான குருட்டுப்பழக்கங்களை விட்டுவிட வேண்டுமாமே. இவ்விதம் உபதேசிப்பவர் அனுஷ்டானத்தில் இதை வைத்துக்கொண்டிருக்கிறாரா? இதெல்லாம் குருட்டுப் பழக்கங்கள். ஜாதி மத பேதம் வேண்டாமென்று ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தமா? அவ்விதமாயின் இவர் பலவிடங்களில் வைஷ்ணவசபைக்குப் போயிருப்பவர் ஆங்காங்கு இம்முறையை விஸ்தரித்ததுண்டா? ஸ்வானுஷ்டானமில்லாமல் பிறருக்கு உபதேசிப்பது நம்மதத்திற்கேற்றதல்ல. ஸமத்வம் வேண்டுமென்று இக்காலத்திலுபதேசிக்கும் பெரியோர்களின் மர்மம் என்ன. பிராமணன் மேலான ஜாதியென்று நினைத்திருக்கிறான். அவனைப்பல விதத்தாலும் சீர்குலையச் செய்யவேண்டும் என்பதே. ஆதல் பற்றியே நம்மோடு அவன் ஸமபங்தியில் உட்கார நினைக்கிறானே தவிர அவனுக்குக் கீழான பறையனை நம்மைக்காட்டிலும் கேவலமாய் வெறுட்டுகிறான். சில ஜாதி சூத்திரர்கள் பிராமணனோடு கூட உட்கார்ந்து புசிக்கவே ஏற்கிறதில்லை. விஷயம் இவ்விதமிருக்க நமது ஆசார்யார் இவ்வளவையும் அறிந்திருந்தும் இதுகாறும் வெளிவிடாத மூட்டையைத் திருவாரூர் சந்நிதியில் உதாக்காரணம் யாதோ.

பிறகு கடையுறையில் தீண்டாமைக்கு நமது மதத்தில் தனக்குத் தெரிந்தமட்டில் கொஞ்சங்கூட இடம் கொடுக்கவில்லையென்கிறார். இதே மொழியைப் பன்முறை.காந்தி கூறுகிறார். ஆயினும் அவர் கூற்றுக்குப் பதிற் கூறவேண்டாம். ஏனெனில் சாஸ்திரமென்பது இன்னதென்றே அறியாத இவர் எதை வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போகட்டுமென்பதே. நமது ஆசார்யரை அவ்விதம் உபேக்ஷை செய்வதற்கில்லை. ஆகையால் ஆசாரியரைக் கேட்கிறேன். ஐயா, தாங்கள் எதைதை சாத்திரமாகக் கொண்டிருக்கிறீர்கள். தங்களுக்கு ராமானுஜர் முதலிய ஆசார்யர்களிடம் நம்பிக்கை உண்டா? ரிஷிகளை நம்புவதுண்டா? ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களில் பற்றுண்டா? இவ்வளவும் உண்டென்றால் ஜாதி பேதமில்லையென்று ஒரு வசனத்தையாவது நிரூ

பித்து நிலை நாட்ட முன் வருவீர்களா? இவை பிரமாணமில்லை யென்றால் தங்களது வார்த்தை எவ்விதம் பிரமாணமாகும்,

இனி அத்வைதாசார்யர்கள் பஞ்சமர்கள் இதர வருணத்த வர்கட்குக் கீழ்ப்பட்டவர்களல்லவெனறும் செய்கையினால் தான் ஒவ்வொருவரும் மேன்மையையோ தாழ்மையையோ அடைகிற வர்களே தவிர பிறப்பினால் அடைவதில்லை என்று சொல்லியிருப் பதாய்க் கூறியிருக்கின்றனர். இது எங்கிருக்கிறது. இவ்விதம் இருப்பதை கோபாலாசாரவர்கள் இருக்குமிடத்தையும், ஸந்தர் ப்பத்தையும் விவரமாய் வெளியிடவேண்டும். இல்லையேல் அத் வைதாசார்யர்களையும் அத்வைதிகளையும் அவமானப்படுத்தியதே யாகும். இதிருக்கட்டும்.

பிறகு அப்பயதீக்ஷிதர் பஞ்சமர்களுடன் கூட புசிக்கலாமெ ன்று சொன்னதாய்க் கூறுகிறார். இது எந்த ஸந்தர்ப்பமென்று காட்டும்வரை அறியாத ஜனங்களுக்கு ஆச்சர்யத்தை உண்டுப ண்ணும்.

ராமானுஜர் பஞ்சமர்களென்றுவித்தியாஸம்பாராட்டுகிறதில்லை யென்பதைக் காட்டுவதற்காக கோபுரத்தின்மேல் நின்று அஷ்டா க்ஷரோபதேசம் செய்தாரென்கிறார். இதை வைஷ்ணவர்யாரும் ஒவ்வார். இவரது மனதும் ஒவ்வாது. அதன் உண்மை இது வல்ல. இங்கு விரிக்கிற் பெருகுமென்று சுருங்கச்சொன்னேன். கடைசியாய்த தீண்டாமையை ஒழித்தல்தான் க்ஷேமமென்று முடிததுவிட்டார். உண்மையில் ஆசாருடைய மனதிலும் இப்ப டியே இருக்குமானால், காந்தி கோஷ்டியில் சேர்ந்து ஊர் ஊராய்ச் சொல்லட்டும். தஙகள் ஆசார்யருடைய ஸன்னிதியிலும் தானி ருக்குமிடத்திலும மற்றும் பல்வேறிடங்களிலும் என் பிரசாரம் செய்யக்கூடாது. தானும் அனுஷ்டித்துக் காட்டலாம். வந்தவர் களுக்கெல்லாம் இத்தத்வத்தை வெளியிடலாம்.

தைவமே! இது காலவித்யாஸமோ! உனக்கு இது சம்ம தமா. உன் நெறியில் நீ எழுதிவைத்திருப்பது இதுதானா. பழம் அழகாய் இருக்கிறதே என்று ஆவலுடன் நெருங்கிப் பார்த்தால் எட்டிப் பழமாகிறதே. எல்லாம் உன்செயல். நீயே காப்பாற்று. இப்போது உன் வரவு அவசியம். சுபம்!

M. N, சுப்ரமணியசாஸ்திரிகள்.

# இவரா மஹாத்மா?

மன்னார்குடி ருஜாங்கோப்பில் அஹோபிலமடம், வித்வான் தில்லயம்பூர் ஸ்ரீமான் சக்கிரவர்த்தியாசார்யார் ஸ்வாமிக்கும், மஹாத்மாவென்ற பேர்வைக்குள் மறைந்து, சாஸ்திரங்களுக்கு விருத்தமாகப் பிரசாரம்செய்யக் கிளம்பியிருக்கும் காந்திக்கும், நடந்த ஸம்பாஷணையை நம நேயர்களுக்குத் தெரியப்படுத்துவது நலம் என்று எண்ணி இதை புரட்டாசி-மீ 10உ சுதேசமித்திரனிலிருந்து எழுதுகிறேன். நம் வாசகர்கள் இதிலிருந்து காந்தியின் விபரீதபுத்திப்போக்கை நன்கு தெரிந்து இவர் மஹாத்மாவா? என்பதை ஊகித்துக்கொள்ளுங்கள். ஸம்பாஷணை பின்வருமாறு,

ஸ்வாமிகள்:— இந்த மஹாத்மாவாகிய காந்தியே நமது புராதனமான வர்ணாச்ரமதர்மங்களைக் காப்பாற்றவேண்டும். அப்படிக்கில்லாது அந்த தர்மத்திற்கு விருத்தமாக, தீண்டாமை, விதவாவிவாகம் முதலியவற்றைப்பற்றி ப்ரசாரம் செய்தால், பாமரஜனங்கள் அக்கொள்கைகளை நம்பி அதைப் பின்பற்றுவார்கள். ஆகையால் அப்படிச்செய்யாமல், வர்ணாச்ரமதர்மங்களைப் பிரசாரம் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். கீதையில் 13-வது அத்தியாயம் 4-வது ச்லோகத்தில் கூறியிருப்பதாவது:— ஹே அர்ஜுனா! நான் உனக்குச் சொல்லுகிற இந்த விஷயமானது முன்னமேயே வேதங்கள், மஹரிஷிகள், வ்யாஸர் ப்ரும்மஸூத்ரம் இவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், அதன்படிக்கு வேதம், ஸ்மிருதிகள், முதலியவைகளெல்லாம் ஹிந்துமதத்திற்கு ப்ரமாணம்தான். அப்படி மன்வாதிரிஷிகளால் சொல்லப்பட்ட ஸ்மிருதிகளில், தீண்டாமை அவசியமென்றும், விதவாவிவாஹம், ப்ரௌடாவிவாஹம் கூடாதென்றும், காணப்படுகிறது. கலியுகத்திற்கு முக்கியமான பராசரஸ்மிருதியும் அப்படியே சொல்லுகிறது. பராசரஸ்மிருதியும், மன்வாதிஸ்மிருதிகளும் ஒருமைப்பட்டுச் சொல்லுகிற விஷயததில் அவைகளெல்லாம் ப்ரமாணமே.

காந்தி:— இந்த கீதாச்லோகமானது தெய்வத்தைப்பற்றிச் சொல்வதால் இந்த இடத்திற்கு இப்படி அர்த்தம் சொல்லக்கூடாது. அப்படி அர்த்தம் சொன்னால் என் கண்ணில் மண்ணைப் போடுகிறதுபோல் இருக்கிறது.

ஸ்வாமிகள்:— அந்த இடம் தெய்வத்தைப்பற்றிச் சொல்லவில்லை என்று அதன் அர்த்தத்தை மறுபடியும் சொல்ல ஆரம்பித்தபொழுது

காந்தி:— அந்தச்லோக அர்த்தம் இப்பொழுது வேண்டாம். நான் பண்டிதனல்ல. என்னிடம் யுக்திவாதம் சொல்லாமல், குழந்தைக்குச் சொல்லுகிறதுபோல் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

ஸ்வாமிகள்:— யுக்திவாதமில்லாமலேயே சொல்லுகிறேன். அந்த ஸ்மிருதிகளின்படி நம்மவர்களில் தீண்டக்கூடாதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருவகைப்பட்டவர்கள். அதில் கிரியையினால், அதாவது தன் ஜாதிகர்மாக்களை அனுஷ்டிக்காமல், பிரஷ்டர்களாய்ப் போகிறவர்கள், அவஸ்தையால் (அதாவது ப்ரஸவித்த ஸ்திரீகள், தூரஸ்திரீகள் முதலியன) இவர்களும், இவர்களுக்கு இவ்வளவு தூரம் விலகவேண்டுமென்றும் இவர்கள் நிழல் இவ்வளவு தூரம்மேல் படக்கூடாதென்றும், சொல்லப்பட்டிருக்கின்றது. இதேமாதிரி ஜாதியால் (பிறப்பால்) தீண்டப்படாதவர்களுமுண்டு. அவர்களுக்கும் விலகவேண்டிய முறையைப்பற்றி சாஸ்திரம் சொல்லுகிறது. இவர்கள் நம்போல் தேவாலயங்களில் பிரவேசிக்கக் கூடாதென்றும், தெளிவாயும், நிஷ்பக்ஷபாதமாயும் காணப்படுகிறது.

காந்தி:— இப்போது தீண்டாமையைப்பற்றி மட்டும் பேசுவோம்.

ஸ்வாமிகள்:— வ்யாஸர் ப்ரும்மஸூத்ரத்திலும் தீண்டாமையின் அவச்யத்தைப்பற்றிச் சொல்லப்படுகிறது.

காந்தி:— ஸ்மிருதிகளெல்லாம் ஹிந்துமத தர்மத்தைப் போதிய அளவு சொல்லவில்லை. இம்மாதிரியான இடங்களை ப்ரமாணமாக ஒத்துக்கொண்டால் எங்கள் கொள்கைகளுக்கு விரோதம். சில இடங்களைத்தான் பிரமாணமாகக் கொள்ளலாம்.

ஸ்வாமிகள்:— அந்த ஸ்மிருதிகளில் எது பிரமாணம், எது அப்பிரமாணம்? ப்ரமாணமாக வைத்துக்கொள்ளவேண்டிய அம்சங்களை எந்தக் காரணங்களைக்கொண்டு ஒத்துக் கொள்ளுகிறது. விலக்கவேண்டியதை எப்படி விலக்குகிறது? ஒரு ஸ்மிருதியில் சில பாகம் பிரமாணம், சிலது இல்லை என்று சொல்லமுடியாது. ஒத்துக்கொண்டால் முழுமையும் ஒத்துக்கொள்ளவேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு பாகத்தைமட்டும் ப்ராமாணமாக ஒத்துக் கொள்ள என்ன காரணம்?

காந்தி:— ஸத்யந்தான் ப்ரமாணம். ஸத்யத்தைக்கொண்டு பார்க்குமிடத்தில் எது யுக்தமாகத் தோன்றுகிறதோ அதுதான் பிரமாணம். மற்றவை அப்ரமாணம்.

ஸ்வாமிகள்:— அப்படியானல் சாஸ்திரம் ப்ரமாணமா? அல்லது அப்ரமாணமா? அல்லது சொந்த அபிப்ராயம் ப்ரமாணமா? அப்படி அபிப்ராயமே ப்ரமாணமாயிருந்தால், தன் தகப்பனுக்கு ச்ராத்தம் செய்யவேண்டிவர அவன் நல்ல லோகத்திற்குப் போயிருக்கிறானு, மறுஉலகம் இருக்கிறதா, இல்லையேல் அவன் சரீரமே ஆத்மாவாக இருக்கும் பக்ஷத்தில், இவனோடே ஆத்மாவும் போய்விட்டதால், ச்ராத்தம் பண்ணவேண்டுமா வேண்டாமா? என்று ஸந்தேகம்வர அதற்காக சாஸ்திரங்களைப்பார்த்து, சிராத்தம் செய்வது வேண்டாமா?

காந்தி:— அவ்விஷயம் உண்மையாக அவன் மனதுக்குப் படாவிட்டால், ச்ராத்தம் செய்யவேண்டியதில்லை.

ஸ்வாமிகள்:— சூாஸ்திரீகளை நாம் ஏன் விலக்கவேண்டும்?

காந்தி:— அவர்களிடம் அசுத்தமிருக்கிறது.

ஸ்வாமிகள்:— அவர்கள் முகம் அசுத்தமா? கைகள் அசுத்தமா? எவை அசுத்தம்? அவர்களை நாம் பார்க்கும்பொழுது யாதொரு அசுத்தமும் தெரியவில்லையே அவர்கள் பர்த்தாமுதலியவர்கள் அவர்களிடம் தினந்தோரும் பழகியவர்கள்தானே.

காந்தி:— மனோ அபிப்பிராயம்தான் மேலும், தீண்டக்கூடாதவர்கள், நம்போல் மனிதர்கள்தானே. அவர்களை மனிதரென்று கருதினல் ஏன் விலக்கவேண்டும்?

ஸ்வாமிகள்:— நல்லது நமது வீட்டில் சமையல்செயய நெருப்பில்லாவிட்டால் அதற்காக பக்கத்துவீட்டில் நெருப்பு வாங்கிக்கொள்ளுகிறோம் ஸ்மசானநெருப்பை ஏன் உபயோகப் படுத்துகிறதில்லை, அதனல் ஸத்யத்திற்கு என்ன பங்கம். 2-ம் நெருப்புதானே.

காந்தி:— அம்மாதிரி நெருப்புப்போல் தீண்டப்படாதவர்களுக்கும், நமக்கும் என்ன ஸ்வரூபபேதமிருக்கிறது?

ஸ்வாமிகள்:— ஸ்ரீராமாயணத்தில் திருசங்குமஹாராஜனுக்கு வஸிஷ்டபுத்ரசாபத்தால் மறுநாள் காலையில் எழுந்திருக்கும் போது, ராஜரூபம் மாறிச் சண்டாளரூபம் வந்துவிட்டது. தலை

F060

மயிர் கருப்புமாறி செம்மட்டையாய்ப் போய்விட்டது. இடுப்பில் அணிந்திருந்த பட்டு பீதாம்பரங்களெல்லாம் அழுக்கடைந்து கந்தலாயின. அவன் ஆபரணங்களெல்லாம் இரும்பாய்ப் போய்விட்டன. அவன் மந்திரிமுதலான பரிஜனங்கள் அவனைச் சண்டாளனென்று, தனியாகவிட்டு விலகிவிட்டார்கள். ஆகையால் ஸ்வரூபபேதமுண்டு. (பாலகாண்டம் பார்க்கவும்)

காந்தி:— அப்படியானல் எங்கள் கொள்கைகளெல்லாம் போய்விடும், கருணையினல் அவனுக்கு ஆலயப்பிரவேசம் செய்து வைக்கிறதா? வேண்டாமா? அவனுக்குதெய்வம் வேண்டாமா?

ஸ்வாமிகள்:— உத்ஸவகாலங்களிலும் தேர் இழுக்கும் காலங்களிலும், ஸ்வாமியை தரிசனம் செய்துகொள்ளலாம். கோவிலுக்குள் நுழைந்து ஸ்வாமிதரிசனம் செய்யவேண்டுமென்பது அவசியமில்லை.

ஸ்ரீமான் ராஜகோபாலாசார்யார்:— கருணையினல் ஆலயப்ரவேசம் முதலியவைகள் பண்ணிவைக்காமல், வேறு அவர்களுக்கு நாம் என்ன செய்யக்கிடக்கிறது.

ஸ்வாமிகள்:— அவர்களுக்கு நாம் வீடுகட்டிக்கொடுக்கலாம்' அன்ன வஸ்திர தானம் செய்யலாம். கைராட்டினம் வாங்கிக் கொடுத்துதவலாம், வர்ணாசிரம தர்மத்திற்கு ஒன்றும் விரோதமாக செய்யக்கூடாதென்று மட்டுமே என் கோரிக்கை. நம் புராதனமான வர்ணாசிரம தர்மங்களை காந்தி அவர்கள் ரக்ஷணம் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் சம்பாஷணை முடிந்தது.

மேற்கண்ட சம்பாஷணை நடக்கும்பொழுது. ஸ்ரீமான்கள் குன்னியூர் சிவசுப்பிரமணியய்யர் M. L. C. தாலூகாபோர்டு பிரஸிடெண்டு கோபாலசாமிமுதலியார், கும்பகோணம் V. பந்துலுவய்யர், பிச்சைய்யாமுதலியார், சேரங்குளம் S. R ராஜகோபாலய்யங்கார் முதலிய பலரும் கூடவிருந்ததாகத் தெரிகின்றது.

வர்ணாச்ரமதார்மிகர்களே இதிலிருந்தாவது இக்காந்தியின் விபரீத எண்ணங்களை நிச்சயமாய் தெரிந்து கொள்ளுங்கள்.

செட்டிநாட்டில் இவர் இந்நாட்டில் உள்ள கோவில்கள் விபசாரி விடுதிகளைவிட எவ்விதத்திலும் சிறந்தனவாகவில்லையென்று நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன் என்று உபதேசம் செய்கிறார்.

தஞ்சாவூரில் செய்த பிரசங்கத்தில் வர்ணாசிரம தர்மங்களை ஒப்புக்கொண்டும் அதை எவ்விதத்திலும் அழிக்கவும் முடியாதென்று கூறுகிறார்.

கோவில்களில் தெய்வமேயில்லை என்று சொல்லுமிவர் ஏன் பஞ்சமர்களை கோவிலுக்குள் விடவேண்டுமென்று கூறுகிறார்.

ஒரு ஸமயம் கோவிலுக்குள் தெய்வமிருந்தால், தான் பிரசங்கம் செய்யும்பொழுது என் நேரில்வந்து தன் பிரசங்கம் நடை பெறுமலோ, அல்லது நாக்கை இப்படி பேசமுடியாமல் செய்திருக்கக் கூடாதென்று கருதுகிறாரோ தெரியவில்லை.

ஏ கிருஷ்ணபகவானே! கலியுக ஆரம்பத்திலேயே இப்படி வர்ணாசிரம தர்மங்களை அழிக்க முற்பட்டிருக்கும் துராத்மாக்களை அடக்காமல் விட்டு விட்டீரே. இனியும் பொருத்துக்கொண்டிருப்பீரேயானால் இனி ஈஸ்வரநாமாவை உச்சரிக்க (ஸ்மரிக்க) வேகூடாதென்றும் கோவில்களில் தெய்வமில்லாததாலும், கோவில்கள் எல்லாவற்றையும் இடித்தும் நிலங்களையும் விற்றுஸ்வராஜ்யம் வாங்க சட்டமும் செய்ய பல துராத்மாக்கள் கிளம்பி விடுவார்கள்.

M. S. சுந்தரேசய்யர். செம்மங்குடி.

## லக்ஷார்ச்சனை.

---

தஞ்சைஜில்லா குடமுருட்டி எனப் பெயர்வாய்ந்த சோழ சூடாமணி நதியின் வடபுறத்தில் விளங்கும், ஆஸ்திகர்களான அந்தணர்களால் அலங்கரிக்கப்பட்ட செம்மங்குடி என்கிற ஸ்வர்ணபுரி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ அகஸ்திய மகாமுனிவரால் மிகவும் பக்தியுடன் பூஜை செய்யப்பட்ட ஸ்ரீ ஆனந்தவல்லி ஸமேத, ஸ்ரீ அகஸ்தீஸ்வரரெனப் பெயர் வாய்ந்த ஸ்ரீ கைலாஸாதிபதியான ஸ்ரீ பார்வதி பரமேசுவாருக்கு ஷை க்ஷேத்திரத்தில், மிகவும் பக்தியுடன் விளங்கும் பக்த ஜனங்களால், சென்ற குரோதன, க்ஷய வருஷங்கள் போல் நாளது பிரபவ வருஷமும் ஸ்ரீ சாரதா நவராத்திரி மஹோத்ஸவத்தில் புரட்டாசிமீ 10உ முதல் 19உ முடிய விசேஷ அபிஷேகாலங்காரமும், ஸ்ரீ ஆனந்தவல்லி எனப் பெயர் பூண்ட பராதேவதைக்கு விதிப்படி மூன்றுவது லக்ஷார்ச்சனையும் நடைபெற்றது. ஷைமீ 20உ ல் ருத்ராபிஷேகமும் நடந்து முடிவு பெற்றது. இந்த ஸமயங்களில் ஒவ்வொருதினமும் சிவனடியார்களின் பலரும் விஜயம் செய்து ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள்ஸமேத

ஸ்ரீ அகஸ்தீசுவரஸ்வாமியை பக்திசிரத்தையுடன் தரிசன வந்தனாதிகள் செய்து ஷ்டி ஆதி தம்பதிகளுடைய அனுக்கிரகத்திற்குப் பாத்திரர்களானார்கள். M. S சுந்தரேசய்யர். செம்மங்குடி.

# ஸ்திரீ தர்மம்.

(576-வது பக்கத்தொடர்ச்சி)

ஆநந்தம் எங்கே, முன் விரித்தபடி ஏற்பட்டஆநந்தக்களிப்பு எங்கே! இரண்டுக்கும் ஸ்வர்க்கத்திற்கும், நரகத்துக்குமுள்ள வித்யாஸமுண்டு. அது மண் போகம், இது விண்போகம். அது உடலாநந்தம், இது ஆத்மாநந்தம், மண்ணாசையையும்பொன்னாசையையும்விண்ணாசையையும் தன்னாசையையும் மறைத்து விட்டனவே!

இந்த மயக்கங்கள் எல்லாம் உடல் இந்திரியங்களால் மனதுக்கும் மனத்தால் இந்திரியங்களுக்கும் பரஸ்பரம் ஏற்பட்ட பாசங்கள் தான். மனோ இந்திரியங்கள் ஒன்றையொன்று ஆசா பாசக்கயிற்றால் இழுத்து ஒரு சண்டை பலகாலும் செய்துகொண்டிருக்க, இடையே ஜீவாத்மாபரமாத்மாவை நினையாமல் தன்னையும் மறந்து ஒண்டியாய் இருக்குமிடந்தெரியாமல் மறைந்து நிற்கிறது.

“ தன்னைத்தான் அறியாமாந்தர்தாணியில் தானுமுண்டோ
பின்னைத்தான் அவர்கள் தாதேபிறந்திறந்து உழலுவானேன் ”

என்றான் ஒரு சீடன் இளந்திசையில் தன்குருவை நோக்கி இன்னிலையில் ஸ்திரீ ஜனங்களை இருத்திவிட்டு ஆண்கள் அவர்களை வேதாந்தக்ஞானம் பெற விடுவதில்லை. ஆத்மஞானம் பெற ஸ்திரீ ஜனங்களுக்கு பாத்தியம் உண்டா என்று விசாரிப்போம்.

देवपूजां नैव कुर्यात् स्त्रीशूद्रस्तु पतिं विना।

தேவபூஜாம் நைவ குர்யாத் ஸ்த்ரீஶூத்ரஸ்து பதிம் விநா।

என்று சுக்ரநீதியில்

“ யஜமானனில்லாமல் ஸ்திரீகளும் சூத்ரர்களும் தேவபூஜை செய்யக்கூடாது ” என்பது இதன் பொருள். இந்த சுலோகத்தின் பின் பாதியில்

नविद्यते पृथक्स्त्रीणां त्रिवर्ग विधि साधनम्।

நவித்யதே ப்ருதக்ஸ்த்ரீணாம் த்ரிவர்க விதிஸாதநம்।

ஸ்திரீகளுக்குத் தனியாக தர்ம, அர்த்த, காமங்களை ஸாதிப்பதில் விதியேற்படவில்லை என்று காணப்படுகிறது.

இதிலிருந்து மோக்ஷத்திற்கு விதி ஸாதனம் உண்டு என்று தெரிகிறது. ஸ்திரீகள் தங்களுக்கு ஏற்பட்ட தர்மங்களை அநுஷ்டித்து வந்தால், மோக்ஷமார்க்கம புலப்படும் போலும். இனி ஸ்திரீ தர்மங்களை அறிந்து அனுஷ்டிக்க விரித்தெழுதுவாம்.

पत्युः पूर्वं समुत्थाय देहशुद्धिं विधाय च ।
उत्थाप्यशयनीयानि कृत्वा वेश्मविशोधनम् ॥

பத்யு: பூர்வம் ஸமுத்தாய தேஹஶுத்திம் விதாயச ।
உத்தாப்ய ஶயநீயாநி க்ருத்வா வேஶ்ம விஶோதநம் ॥

புருஷனுக்கு முன் படுக்கை விட்டகன்று, சரீரத்தை (ஜல மல விஸர்ஜன தந்ததாவனாதி) சுத்தி செய்துகொண்டு படுக்கை விரிப்புக்களை எடுத்து வைத்துப் பெருக்கி மெழுகி வீட்டை சுத்திசெய்து

मार्जनैर्लेपनैः प्राप्यसानलं वयसाङ्गणम् ।
शोधयेद्यज्ञपात्राणि स्निग्धान्युष्णेन वारिणा ॥

மார்ஜநைர்லேபநை: ப்ராப்ய ஸாநலம் யவஸாங்கணம் ।
ஶோதயேத்யஜ்ஞபாத்ராணி ஸ்நிக்தாந்யுஷ்ணேந வாரிணா ॥

அக்னிசாலை, சமையலறை இவைகளைப் பெருக்கி மெழுகி சுத்திசெய்து யக்ஞபாத்திரங்களை வென்னீர்விட்டு சுத்தி செய்யவேண்டும்.

சுக்ரநீதி ]

இந்த இரு சுலோகங்களிலிருந்தும் அறிய வேண்டியவை.

1. ஸ்திரீ புருஷனுக்கு முந்திப் படுக்கை விட்டு எழுந்திருக்க வேண்டும்.

"பின் தூங்கிமுன்னெழும் பேதையே" என்றார் திருவள்ளுவர் தன்மனையாளைப் பார்த்து இதுரீதியில் புருஷன் தூங்கும் வரையில் அவனுக்கு உபசாரங்கள் செய்துவிட்டு அவன் தூங்கின பிறகு தான் சயனம செய்து தூங்கவேண்டும். இரவு கழிந்ததும புருஷன் எழுந்திருக்கும் முன்னாலேயே தான் எழுந்திருக்க வேண்டும்.

சாஸ்திரம் இவ்விதம் கூறினும், தற்காலம் நேர் எதிர்நடையாகவே அநேகமாய் நேருகிறது. பேச்சில்மட்டும, ஸ்வதந்தர வாதமேடையில் ஸமத்வம் ஸ்திரீபுருஷர்களுக்குள் வேண்டுமென்று கூக்குரல் உண்டு. இதின்படி ஸமகாலத்தில் தூங்கி எழுந்தாலும் ஒருவாறு மனம் ஸமாதானம் அடையும். ஆனால் உத்தமதர்மங்களை அநுஷ்டிக்கிறதாகப் பாவிக்கும் பிராமணர் குடி

564



களிலும்கூட ஸ்திரீஜனங்கள் மூன்தூங்கி பின்னெழும் பேதைக ளாக மாறிவிட்டார்கள். இக்குறை ஒருபெருங் குறைதான். எந்தக்குறைவும் அது குறைவு என்று ஒருவன் அறிந்துகொண்ட க்ஷணத்தில் அக்குறைவு நீங்கிவிடும். குறைவு குறைவுதான் என்று அறிய யோசனை வேண்டும். யோசிக்க விஷயம் வேண் டும். யோசிக்க யோசிக்க விஷயம் வெளியாகும். விஷயம் வெளியாக, வெளியாக யோசனை தோன்றும். இது அன்யோன் யாச்ரயம். இது ஒருசாஸ்திர ரஹஸ்யம். இந்த ரஹஸ்யத்தைத் தத்வமாக உட்படுத்தியே ஸ்மிருதிகர்த்தாக்கள் காரணங்கள் சொல்லாமலேயே காரியங்களைமட்டும் சட்டதிட்டங்களாக வரைந்துவைத்துவிட்டார்கள். காரணம் தெரிவிக்காத காரியங் களை, அக்ஞர்களும் க்ஞாதாக்களுமே அநுஷ்டிப்பார்கள். அக் ஞர்கள் அறியாமல் அனுஷ்டிப்பார்கள். க்ஞாதாக்கள் (அறிவுள் ளோர்கள்) காரணம் அறிந்து அநுஷ்டிப்பார்கள். இருவரும் கார் யத்தின் பலனை அடைவார்கள். நடுவிலுள்ள அரைகுறை க்ஞா னிகள் காரணத்தை அறிவதுமில்லை கார்யத்தை நம்புவதுமில்லை. காரணத்தை அறியும்வரையில் காரியத்தைச் செய்வதில்லை. ஆத லால் கார்யத்தின் பலனை அடைவதில்லை. காரணம் அறிந்தபின் னும் கார்யத்தை நடத்துவதில்லைஇதின் காரணம்மட்டும் விசித்ரம் தான். காரணம் அறியாமல் காரயம் செய்வதில்லை என்ற உறுதி கொண்டோம். காரணம அறிந்தபின் கார்யம் தான் ஏன் செய்ய வில்லையென்பதற்குக காரணம் விசாரிப்பதில்லை. இந்தக் காரணம் விசாரிப்பதில் ஒரு ரகஸ்யம இருககிறது. இந்தக் காரணத்தை விசாரிக்க ஆரம்பிககும் ஒருவன அதின் பின்காரணம் அறிவதற்கு முன்னாலேயே கார்யங்களைச் செய்ய ஆரம்பித்துவிடுவான.

ஆனல் பலன் ஒன்று ஏற்பட்டாலும் அறிவுபடைத்த மக்களை அக்ஞதசையிலேயே இருத்தி நம்பிக்கையில்கார்யங்களைச் செய்பச்சொல்வதைவிட, க்ஞானத்தைககொடுத்து கார்யத்தில் ஏவுவது மிக நல்லது. இதுவே சாஸ்திரஸம்ப்ரதாயங்களின் உள் கருத்து. மௌட்யதசையிலேயே கார்யங்களில் ஏவிவிட்டு பின் அக்கார்யங்களை அறியவேண்டி யக்ஞானம் புகட்டிவிடும் சாஸ்தி ரங்கள். வேதத்தில், முன் கர்மகாண்டமும் பின் க்ஞானகாண் டமும் கூடியிருப்பதின் ரஹஸ்யப்பொருள இதுவே போலும்.

ஸ்திரீ புருஷனுக்குமுன் துயிலெழவேண்டும என்றும் கூறி யாயிற்று. பின் காரணஙகள் ஒருவாறு கூறப்படும்.

ஸாரம் ரங்கசாரியார்.